முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

O.S No.801/2018

**Witness PW 1**

பெயர்: உமாமகேஷ்வரி

த/பெ.: சுரேஷ்

இன்று (07/01/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

சத்தியமாக சொல்கிறேன்.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. நான் என்ன வழக்கு போட்டுள்ளேன் என்றால் எனது அப்பா பெயரில் உள்ள சொத்தில் வழக்கு போட்டுள்ளேன். எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கான சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் அது தெரியாது, ஆனால் சொத்து பற்றி தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் என்ன எழுதியுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். வழக்கு 3ம் பிரதிவாதி சித்ரா எனது உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். எனது தந்தையார் 1ம் பிரதிவாதி துரைராஜ் 3ம் பிரதிவாதி சித்ரா பெயரில் குடும்ப சொத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி கற்பகம் பெயரில் பொது குடும்ப சொத்தில் 19 செண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் அது தெரியும். 2ம் பிரதிவாதி பஞ்சாட்சரம் பெயரில் எனது தந்தையார் எந்த சொத்தும் எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, எழுதி வைத்துள்ளார். எந்த சொத்தை எழுதி வைத்துள்ளார் என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1ம் வாதி ராமு பெயருக்கு பொது குடும்ப பணத்திலிருந்து 1ம் பிரதிவாதி சொத்து வாங்கி உள்ளார் என்றால் இல்லை. அந்த சொத்தை காட்டாமல் மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது திருமணம் செய்து வைத்த போது 15 பவுன் நகை சீர்வரிசை செய்து தான் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. நான் தற்போது தெளிமேடு கிராமத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எவ்வளவு வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் 15 வருடங்களாக வசித்து வருகிறேன். குடும்பத்தில் அனைவரும்

ஒன்றாக இருந்தபோது 3 ஏக்கர் போகியத்தில் பயிர் வைத்தார் என்றால் இல்லை. விழுப்புரம் நகரில் தான் வசிப்பதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் விழுப்புரத்தில் இல்லை, தெளிமேட்டில் தான் வழக்கு சொத்தில் பயிர் வைத்து வருகிறேன் என்றால் சரியல்ல. குடும்ப சொத்தில் 1 ஏக்கர் தனிப்பட்ட முறையில் பயிர் வைத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தனியாக வீடு கொடுக்கப்பட்டு அதில் வசித்து வருகிறேன் என்றால் வீடு கொடுக்கவில்லை, நான் ஒரு சிறு நிலத்தில் தான் குடிசை போட்டு இருக்கிறேன். வீட்டு பொது சொத்திலிருந்து கறவை மாடு 10 எனக்கு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வனத்தையன் ஆசிரியரிடம் குடும்ப நிலத்தை அடமானம் போட்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. அடமான வழக்கு கூடுதல் சார்பு நீதிமன்றம் 2-ல் அ.வ.எண்.399/2016 இறுதிநிலை தீர்ப்பாணை விசாரணை நடந்து வருகிறது என்றால் அது எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

(Sd/-A.Tamilselvan)
Principal Subordinate Judge,
Villupuram